DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF PROCEDURE)

IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, THIRUPATTUR DISTRICT

| | |
|---|---|
| Name | நிர்மலா |
| Husband's Name | இதயவேல் |
| Village | இளையநகரம் |
| Taluk | வாணியம்பாடி |
| Calling | இல்லத்தரசி |
| Age | 49 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1872 on the day of **18.08.2025**

**O.S. No. 46/2025 வா.சா.1**

**<u>முதல் விசாரணை:–</u>**

இவ்வழக்கில் நான் 1–ம் வாதி ஆவேன். வாதிகள் தரப்பில் 1–வது சாட்சியாக எனது முதல் விசாரணை வாக்குமூலத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும். எனக்கு தமிழ எழுதப்படிக்க தெரியும். அதன் பின்னர், படித்து பார்த்து, அதில் கையொப்பம் இட்டேன்.

| | | |
|---|---|---|
| **வா.சா.ஆ.1** | : | 29.03.2024ம் தேதி வழங்கப்பட்ட 10.03.2024ந் தேதியில் கே.இதயவேல் என்பவர் இறந்ததற்கான இறப்பு சான்றிதழ் கணினி பதிவிறக்கம் |

| | | |
|---|---|---|
| **வா.சா.ஆ.2** | : | 1ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்ட நகல் |
| **வா.சா.ஆ.3** | : | 2ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்ட நகல் |
| **வா.சா.ஆ.4** | : | 3ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்ட நகல் |
| **வா.சா.ஆ.5** | | 4ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்ட நகல் |
| **வா.சா.ஆ.6** | | 5ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்ட நகல் |
| **வா.சா.ஆ.7** | | 6ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்ட நகல் |
| **வா.சா.ஆ.8** | | 4 முதல் 6 வரையிலான வாதிகள் மற்றும் இறந்துபோன இதயவேல் பெயர் கொண்ட குடும்ப அட்டையின் நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) |
| **வா.சா.ஆ.9** | | 04.04.2024ம் தேதியிட்ட வாரிசு சான்று மனுவை 1ம் பிரதிவாதி அலுவலகத்தால் நிராகரிக்கப்பட்டதற்கான Application status கணினி பதிவிறக்கம் |

<u>குறுக்கு விசாரணை:–</u>

1. எதற்காக இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளோம் என்றால் இறந்துபோன எனது கணவர் இதயவேல் என்பவரின் வாரிசு சான்றிதழ் கோரி

தாக்கல் செய்துள்ளோம். நான் எனது கணவருக்கு எத்தனையாவது மனைவி என்றால் முதல் மனைவி ஆவேன். எனக்கும் எனது கணவர் இதயவேல் என்பவருக்கும் எத்தனை குழந்தைகள் பிறந்தார்கள் என்றால் 2 குழந்தைகள் முறையே 2 மற்றும் 3ம் வாதிகள் ஆவார்கள்.

2. வழக்கின் 4ம் வாதி யார் என்றால் இறந்துபோன எனது கணவரின் 2வது மனைவியாவார். நான் தாக்கல் செய்துள்ள எனது முதல் வாக்குமூலத்தை நான் படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேனா என்றால் ஆம். எனது கணவரின் பெற்றோர் தற்போது உயிருடன் உள்ளனரா என்றால் இல்லை. மேற்படி எனது கணவரின் பெற்றோர் இறந்துவிட்டனர் என்பதற்காக ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை, அவர்கள் பல வருடங்களுக்கு முன்பே இறந்துவிட்டதால் ஆவணங்கள் ஏதும் இல்லை.

3. எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் நான் கூறியுள்ளவாறு 4ம் வாதியை எனது கணவர் எனது ஒப்புதலுடன் 2வதாக திருமணம் செய்து கொண்டார் என்று நான் கூறியுள்ளேனா என்றால் சரிதான். மேற்படி எனது ஒப்புதலுடன் திருமணம் செய்துகொண்டததால் தான் 1 முதல் 6 வாதிகளான அனைவருமே இறந்துபோன இதயவேலுக்கு வாரிசுகள் என கோரியுள்ளேன் என்றால் சரிதான்.

4. மேற்படி 4ம் வாதி உயிருடன் இருக்கும்போதே இறந்துபோன இதயவேல் என்பரின் வாரிசு என கோரமுடியாது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி விவரம் எனக்கு தெரிந்தும் 4ம் வாதியும் உட்பட வாரிசுகளாக விளம்புகை செய்யக்கோரி எனது முதல் விசாரணை

வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி நான் எனது வழக்கில் கோரியுள்ள பரிகாரம் வேறு, முதல் விசாரணை வாக்குமூலத்தில் கோரியுள்ள பரிகாரம் வேறு என்பதால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல.

| | |
|---|---|
| ***ESHWAR VISWANATHAN*** | *DISTRICT MUNSIF*<br>*Digitally signed by ESHWAR VISWANATHAN* |

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**வாணியம்பாடி.**